# பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2017/2018

## மாணவர் கைந்நூல்

கல்விப்பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

நாவல, நுகேகொட.

தொலைபேசி இல. - 011 2881-231,

011 2881-390,

011 2853-777

தொலைநகல் - 011 2768055

இணையத்தளம் – www.ou.ac.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு சில வார்த்தைகள்

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடரவிருக்கும் உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தைத் தொலைக்கல்வி முறையில் பயில்வதற்காக நீங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள். இம் முறையில் விரிவுரையாளர்களை அல்லது போதனாசிரியர்களை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாகும். எனவே, உங்களது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சகல விடயங்களையும் **இக் கைநூலை நன்றாக வாசிப்பதன் மூலம் விளங்கிக்கொள்ள வேண்டுமென** எதிர்பார்க்கப்படுகிறீர்கள்.

இக்கைநூலில் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு நாட் பாடசாலைகள், போதனா வகுப்புக்கள் முதலியவற்றில் கலந்துகொள்வதும், குறிக்கப்பட்ட இறுதித்தினத்துக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட வேண்டிய ஒப்படைகளைச் சமர்ப்பிப்பதும் உங்களது பொறுப்பாகும். இக்கைந்நூலுக்குப் புறம்பாக நேர அட்டவணைகளில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமே அறியத்தரப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**இந்நிகழ்ச்சித்திட்டத்தினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு எமது வாழ்த்துகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்
# கல்வியாண்டு 2017/2018

**உள்ளடக்கம்**


1. நிகழ்ச்சித் திட்டம் பற்றிய பொதுத்தகவல்கள்
2. மதிப்பீடு
3. சிறப்புத் தேர்ச்சி வழங்கல்
4. நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விசாரணைகள்
5. நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம்
6. நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர் குழு
7. கற்பித்தற் பயிற்சி தொடர்பான விபரங்களும் அறிவுறுத்தல்களும்
8. முகவரி மாற்றம்
9. நிறைவாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் (மட்டம் 7)
## கல்வியாண்டு 2017/2018

### 1.0 நிகழ்ச்சித்திட்டம் பற்றிய பொதுத்தகவல்கள்

### 1.1 நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம்

தரமிக்க வாண்மைசார் பயிற்சியை கல்வித்துறையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களுக்கும், பட்டதாரி அதிபர்களுக்கும் கல்வி நிர்வாக சேவையிலுள்ள பட்டதாரி உத்தியோத்தர்களுக்கும் வழங்குதல்.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்கள்

கல்வித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில் வாண்மைசார் தேர்ச்சிகளை மேம்படுத்துவதன் ஊடாக கல்விசார் செயன்முறைகளின் தரத்தினை முன்னேற்றுதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இக் கல்வித் தகைமையை பெற்றுக்கொள்பவர்கள் நிகழ்ச்சித்திட்டத்தனை நிறைவு செய்யும் போது;

- கல்வியின் வேறுபட்ட துறைகளோடு தொடர்புபட்ட அறிவினையும் விளக்கத்தினையும் பொருத்தமான மட்டத்தில் வெளிக்காட்டுவர்.
- தமது தொழில்வாண்மைசார் நடைமுறைகளுடன் தொடர்புபட்ட நுட்பங்களை வினைத்திறனும் விளைதிறனுமிக்க வகையில் பிரயோகிப்பர்.
- உயர் வாண்மைசார் தீர்மானங்களை பேணுவதனூடாக கல்வியில் பல்வகைமைசார்ந்த பிரச்சினைகளை முறையாகவும் ஆக்கத்திறன் மிக்கதாகவும் முகாமை செய்வர்.
- தொழில்வாண்மைசார்ந்த வகையிலும் தமக்கேயுரித்தான தனித்துவமிக்க வகையிலும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பர்.

### 1.3 இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கால எல்லை

- இது 15 மாதகால நிகழ்சித்திட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.4 **கற்பித்தல் மொழி**

இந்நிகழ்ச்சித்திட்டம் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

1.5 **தமிழ் மொழிமூல நாட்பாடசாலைகள் நடைபெறும் பிராந்திய மற்றும் கற்கை நிலையங்கள் பின்வரும் இலங்கை புறவுருவப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.**

1. கொழும்பு பிராந்திய நிலையம்
2. கண்டி பிராந்திய நிலையம்
3. யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம்
4. மட்டக்களப்பு பிராந்திய நிலையம்
5. அம்பாறை கற்கை நிலையம்
6. திருகோணமலை கற்கை நிலையம்
7. ஹற்றன் கற்கை நிலையம்
8. வவுனியா கற்கை நிலையம்
9. புத்தளம் கற்கை நிலையம்
10. குருணாகல் கற்கை நிலையம்
11. பண்டாரவளை கற்கை நிலையம்
12. அனுராதபுரம் பிராந்திய நிலையம்
13. கிளிநொச்சி கற்கை நிலையம்
14. பதுளை கற்கை நிலையம்
15. முல்லைத்தீவு கற்கை நிலையம்
16. களுத்துறை கற்கை நிலையம்
17. இரத்தினபுரி கற்கை நிலையம்
18. மன்னார் கற்கை நிலையம்




**குறித்ததொரு நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் அந்நிலையத்தில் நாட் பாடசாலைகள் நடத்தப்படுவது பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்.**

**ஆங்கிலமொழி மூல நாட்பாடசாலைகள் கொழும்பு, கம்பஹா நிலையங்களில் மாத்திரமே நடைபெறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.6 நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய பாடநெறிகள்

இந்த நிகழ்ச்சித்திட்டம் **ஒன்பது** பாடநெறிகளை உள்ளடக்கியுள்ளது. **ஆறு (6)** கட்டாய பாடநெறிகளும் இரு தொகுதிகளைக்கொண்ட விருப்புக்குரிய பாடநெறியிலிருந்து இரண்டு பாடநெறிகளும் தொடர்ச்சியான செய்முறைக் கூறாகிய **கற்பித்தல் பயிற்சியும்** நடைபெறும்.

* உங்கள் பாடநெறிகளுக்கான குறியீடுகள் மட்டும் 01.01.2018இல் இருந்து தானாகவே மாற்றத்திற்கு உட்படும். நீங்கள் உங்கள் பதிவினை 2018/2019 இற்கு புதுப்பிற்கின்றபொழுது புதிய பாடநெறிக் குறியீடுகள் உங்கள் பதிவுப்புத்தகத்தில் இடம்பெறும்.

பாடநெறிகளுக்குரிய மொடியூல்களை மாணவர்கள் தாம் பதிவுசெய்துள்ள மத்திய /பிரதேச கற்கை நிலையங்களில் தமது மாணவர் பதிவுப் புத்தகத்தை (Student's Record Book) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள முடியும்.

**பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்ட பாடநெறி உள்ளடக்கம்**

| இல | பாடநெறி | தற்போதைய குறியீட்டு இல | * புதிய குறியீட்டு இல 01.01.2018 தொடக்கம் |
|---|---|---|---|
| | **கட்டாய பாடநெறிகள்** | | |
| 1 | கல்வி உளவியல் | ESP2201 | STP8501 |
| 2 | கல்வியின் அடிப்படைகள் | ESP2202 | STP8502 |
| 3 | கல்வி அளவீடும் மதிப்பீடும் | ESP2103 | STP8303 |
| 4 | கல்வித் தொழினுட்பம் | ESP2204 | STP8504 |
| 5 | ஒப்பீட்டுக்கல்வியும் கல்விப் பிரச்சினைகளும் | ESP2205 | STP8505 |
| 6 | கல்வி வழிகாட்டலும் ஆலோசனைகூறலும் | ESP2106 | STP8306 |
| | **விருப்புக்குரிய பாடநெறிகள்** | | |
| 7 | கலைத்திட்டக் கொள்கையும் நடைமுறையும் | ESP2107 | STP8307 |
| 8 | கல்வி முகாமைத்துவம் | ESP2108 | STP8308 |
| 9 | சிறுவர் உரிமைகள் | ESP2109 | STP8309 |
| 10 | ஆரம்பக்கல்வி | ESP2110 | STP8310 |
| 11 | உள்ளடங்கல் கல்வி | ESP2111 | STP8311 |
| 12 | பல்தரக் கற்பித்தல் | ESP2112 | STP8312 |
| 13 | கற்பித்தற் பயிற்சி | ESE7311 | STE8811 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டாய பாடநெறிகள்**

**தொடருறு கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

9) ESE7311 - கற்பித்தற் பயிற்சி

(10 வாரங்கள் தொடர்ச்சியான செய்முறைக்கூறு)

மேற்படி பாடநெறிகளில் நீங்கள் தெரிவுசெய்து விண்ணப்பித்த சகல பாடநெறிகளும் மாணவர் பதிவுப்புத்தகத்தில் பதியப்பட்டுள்ளதா என்பதைக் கவனமாகப் பரிசீலனை செய்து உறுதிப்படுத்திக் கொள்ளவும். **முதற்பதிவினை செய்து கொண்டதன் பின்னர் பாடநெறிகளில் ஏதாவது மாற்றங்களை செய்ய விரும்பினால் அதனை 2017 ஜீன் மாதம் 17ஆம் திகதிக்குள் செய்து கொள்ளலாம். அதே போல் ஏதாவது பாடநெறியினை விலக்கிக் கொள்வதாயின் அதனை 2017 ஆகஸ்ட் 17ஆம் திகதிக்குள் செய்துகொள்ள முடியும். இதன் பின்னர் உங்களது எந்தவொரு வேண்டுகோளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.** மாணவர் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள பாடநெறிகளுக்குரிய நாட்பாடசாலைகளுக்கு மாத்திரமே சமூகமளிக்க முடியும் என்பதோடு அப்பாடநெறிகளுக்குரிய ஒப்படைகளை மாத்திரமே ஒப்படைக்கவும் வேண்டும்.

## 1.7 கற்றல் முறை

பிரதான கற்பித்தல் முறை தொலைக்கல்வி முறையாகும். ஒவ்வொரு பாடநெறிக்கும் வழங்கப்படும் மொடியூல்களைப் பிரதான வழிகாட்டியாகக்கொண்டு சுய கற்கைகளில் ஈடுபட வேண்டுமென்று மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். மொடியூல்களில் தரப்பட்டுள்ள செயற்பாடுகளைச் செய்வதும், வினாக்களுக்கு விடையளிப்பதும், பாட அலகுகளுக்கு மேலதிகமாக வாசிப்பில் ஈடுபடுவதும் மாணவர்களின் பொறுப்பாகும். இப்பாட நெறிகள் காலத்திற்குக்காலம் நடைபெறும் நாட்பாடசாலைகள், போதனா வகுப்புக்கள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றால் மேலும் வளமூட்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.7.1 நாட்பாடசாலைகளும் செயலமர்வுகளும்



நாட்பாடசாலைகள் நடத்தப்படுவதன் நோக்கம் தொலைக்கல்வி ஊடகமுறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அப்பாடத்திற்கான கற்றல் அமர்வுகளில் உள்ள விடயங்கள் தொடர்பாக மேலதிக அறிவைப் பெற்றுக் கொள்வதற்குமான சந்தர்ப்பங்களை அளிப்பதற்காகும்.

இந் நாட்பாடசாலைகள், வார நாட்களில் அல்லது வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்படலாம். நாட்பாடசாலை, வார நாட்களில் நடைபெறுமாயின் அதற்கென ஆசிரியர்களும் கல்விசார் உத்தியோகத்தர்களும் கடமை விடுப்பினை பெற்றுக் கொள்ள முடியும். ஒவ்வொரு நாட்பாடசாலையிலும், ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை பூரணமாகக் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு மட்டுமே அந்நாட் பாடசாலைகளுக்கான வரவுச்சான்றிதழ் அளிக்கப்படும். எனவே நேர அட்டவணையின்படி, நாட்பாடசாலைகளுக்குச் சமுகமளித்தலும், நாட்பாடசாலை முடியும்வரை முழுமையாகப் பங்குபற்றலும் மாணவர் பொறுப்பாகும். நாட் பாடசாலைகளுக்கு சமுகமளிப்பதற்கு முன்பதாக மொடியூல்களை வாசித்து முன் ஆயத்தத்துடன் வர வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கப்படுகின்றீர்கள்.

சுயகற்கையின்போது, நீங்கள் இடர்படும் பகுதிகளுக்கு, நாட்பாடசாலையில் விளக்கமளிக்கப்படும். அத்துடன் பாடநெறி தொடர்பான மேலதிக தகவல்கள், பிரசுரங்கள் என்பனவும் வழங்கப்படலாம். நாட்பாடசாலைகளில் கலந்துகொள்வதன் மூலம், இக்கற்கைநெறியைப் பயிலும் ஏனைய மாணவர்களைச் சந்திப்பதற்கும், பாடநெறி தொடர்பான கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

எல்லா நாட்பாடசாலைகளும் செயற்பாடுகள் சார்ந்த அமர்வுகளாக ஒழுங்கமைக் கப்படும். இது மாணவர்களுக்கு குழு வேலை, முன்வைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற செயற்பாடுகள் மூலமாகக் கற்றலில் ஈடுபட்டுக் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்கும். ஆதலால் மாணவர்கள் இதில் செயலூக்கத்துடன் பங்கு பற்றி தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள அதிக சந்தர்ப்பம் கிடைக்கும்.

மேலும் ஒவ்வொரு பாடநெறிக்குமுள்ள ஒரு ஒப்படை இந்நாட்பாடசாலைகளின் போது மதிப்பீடு செய்யப்படும். ஆதலால், இவ் ஒப்படையிலும் நாட் பாடசாலையிலும் பங்குபற்றுவது கட்டாயமானதாகும். இந்நாட்பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் நேர அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன.

### 1.7.2 மாணவர்களுக்கான போதனா வகுப்புச் செயலமர்வுகள்

நாட்பாடசாலைகளுக்கு மேலதிகமாக **போதனா வகுப்புக்கள்** (Tutorial Classes) பின்வருமாறு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

| பாடநெறி | மணித்தியாலம் |
|---|---|
| ESP2201 - கல்வி உளவியல் | 05 |
| ESP2202 - கல்வியின் அடிப்படைகள் | 05 |
| ESP2103 - கல்வி அளவீடும் மதிப்பீடும் | 06 |
| ESP2205 - ஒப்பீட்டுக்கல்வியும் கல்விப் பிரச்சினைகளும் | 05 |
| ESP2204 - கல்வித்தொழினுட்பம் | 03 |
| ESP2106 - கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் | 03 |
| ESP2107- கலைத்திட்டக் கொள்கையும் நடைமுறையும் | 02 |
| ESP2108- கல்விமுகாமைத்துவம் | 02 |
| ESP2109- சிறுவர் உரிமைகள் | 02 |
| ESP2110- ஆரம்பக்கல்வி | 02 |
| ESP2111- உள்ளடங்கற் கல்வி | 02 |
| ESP2112- பல்தரக்கற்பித்தல் | 02 |



இவ்வகுப்புக்கள் நடைபெறும் தினங்கள், இடம் என்பவற்றை வகுப்புக்கான போதனாசிரியர் மாணவர்களுடன் கலந்தாலோசித்துத் தீர்மானிப்பார். போதனாசிரியர் எதிர்பார்க்கும் முன் ஆயத்தங்களுடன் இவ்வகுப்புக்களில் சமுகமளித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய பயனைப் பெற்றுக்கொள்வது மாணவர்களின் பொறுப்பாகும். இவ் வகுப்புக்களில் கலந்து கொள்வதன் மூலம் மாணவர் தமது நிகழ்ச்சித்திட்டம், பாடநெறி தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுடன், திறந்த பல்கலைக் கழகத்துடன் கூடிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

### 1.7.3 கட்புல செவிப்புல சாதனங்கள்

இக்கற்கை நெறியை மாணவர்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாகக் கட்புல-செவிப்புல சாதனங்கள் இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்விப் பகுதியினரால் தயாரிக்கப்பட்டுள்ளன. திறந்த பல்கலைக்கழக நூல்நிலையத்திலுள்ள கட்புல-செவிப்புல வள நிலையத்திலும் நாட்பாடசாலைகள் நடைபெறும். பிரதேச/கற்கை நிலையங்களில் குழுக்களாக அல்லது தனித்தனியாக மாணவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதேபோல் நாட்பாடசாலைகளில் வசதிகளைப் பொறுத்து இச்சாதனங்கள் காண்பிப்பதற்கு முடிவு எடுக்கப்படும்.



## 2 மதிப்பீடு

**2.1** மதிப்பீடு பின்வரும் மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டிருக்கும். அவ்வனைத்துப் பகுதிகளும் கட்டாயமானதாகும்,

அ) ஒப்படைகள் மூலம் நடத்தப்படும் தொடர்மதிப்பீடு.

ஆ) கல்வி ஆண்டின் இறுதில் நடத்தப்படும் எழுத்துப்பரீட்சை.

இ) செயன்முறைக்கற்பித்தல் தொடர்பாக நடைபெறும் மதிப்பீடு.

### 2.2 ஒப்படைகள் மூலம் நடாத்தப்படும் தொடர் மதிப்பீடு

தொடர் மதிப்பீட்டு ஒப்படைகளில் மூன்று வகையான ஒப்படைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

1. வீட்டில் இருந்தவாறு எழுதி சமர்ப்பிக்க வேண்டிய எழுத்து மூலமான ஒப்படைகள்
2. நாட்பாடசாலையில் செய்ய வேண்டிய செயற்பாட்டு அடிப்படையிலான ஒப்படைகள் (ABA)
3. தொடர் கணிப்பீட்டுப் பரீட்சை (CAT)

இது தொடர்பாக கீழ்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒப்படைப் புள்ளிகள் இறுதிப்பரீட்சைக்கான சித்தியைத் தீர்மானிக்கப் பயன்படும்.
- இறுதிப்புள்ளியைத் தீர்மானிக்கும் போது குறித்த பாடநெறிக்குரிய சகல ஒப்படைகளினதும் சராசரிப் புள்ளி கவனத்தில் எடுக்கப்படும்.
- சகல ஒப்படைகளிலும் "C" மற்றும் அதனைவிட உயர் சித்தியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- ஒப்படைப் புள்ளிகளின் சராசரியும் "C" மற்றும் அதனிலும் உயர்ந்த தரத்தில் அமைதல் வேண்டும்.

ஒப்படைப் புள்ளிகளின் சராசரி = ஒப்படைகள் யாவற்றினதும் மொத்தப்புள்ளி / குறித்த பாடநெறிக்குரிய ஒப்படைகளின் எண்ணிக்கை

**குறிப்பு:** மூன்று ஒப்படைகள் சமர்ப்பிக்க வேண்டிய பாடநெறி ஒன்றிற்கு நீங்கள் இரண்டு ஒப்படைகளை சமர்ப்பித்திருப்பின் இரண்டு ஒப்படைகளுக்கான மொத்தப்புள்ளிகள் மூன்றினால் (3) வகுக்கப்பட்டு சராசரிப்புள்ளி கணிக்கப்படும். ஒப்படைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் ஆரம்ப நிகழ்வின்போதும் வழங்கப்படும்.

ஒவ்வொரு மாணவரும் தாம் பயிலும் ஒவ்வொரு பாடநெறிக்கும் உரிய ஒப்படைகளைக் கட்டாயமாகச் சமர்ப்பித்தல் வேண்டும். 6 திறமை மட்டமுடைய பாடநெறிக்கு மூன்று ஒப்படைகள் வீதமும் 3 திறமை மட்டம் உடைய பாடநெறிக்கு இரண்டு ஒப்படைகள் வீதமும் மொத்தமாக எட்டுப் பாட நெறிகளுக்கும் எல்லாமாக இருபது ஒப்படைகளை பூரணப்படுத்த வேண்டும்.

ESP2201, ESP2202, ESP2204, ESP2205 இன் மூன்றாவது ஒப்படை செயற்பாடு சார்ந்த ஒப்படையாகும். இதனை கற்கை அமர்வுகளில் பங்குபற்றி எடுத்துரைப்பதன் மூலம் புள்ளிகள் வழங்கப்படும். ESP2201, ESP2202, ESP2204, ESP2205 இன் முதலாம் ஒப்படைகளை குறிப்பிட்ட திகதிக்கு முன்பதாக நீங்கள் பதிவுசெய்த கற்கை நிலையத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பாடநெறிகளுக்கான தொடர்கணிப்பீட்டு பரீட்சைக்கு உரிய தினத்தில் தோற்றுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பாடநெறிகள் நான்கிற்கும் இரண்டு ஒப்படைகள் வீதம் எட்டு (8) ஒப்படைகளும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். (அட்டவணை 2.1 இனைப் பார்க்க) எல்லாமாக இருபது(20) ஒப்படைகள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடநெறிகளிலும் ஒரு ஒப்படையானது நாட்பாடசாலைகளில் மதிப்பீடு செய்யப்படும்.

**ஒரு குறிப்பிட்ட பாடநெறியின் ஒப்படைப் புள்ளிகளிலிருந்து தகுதியை ஒரு முறை பெற்றால், அது தொடர்ந்து வரும் இரண்டு கல்வி ஆண்டுகளுக்கு மாத்திரமே பெறுமதி உடையதாகும்.**

எல்லா ஒப்படைகளையும் பூரணப்படுத்தல் கட்டாயமானதாகும். (ஒப்படைகளும் அவை தொடர்பான அறிவுறுத்தல்களும் அறிமுகக் கூட்ட நிகழ்வில் வழங்கப்படும்)

## 2.3 இறுதிப் புள்ளிகளைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு பாடநெறிக்குமுரிய ஒப்படைகளுக்கான சராசரிப் புள்ளிகள், இறுதிப் பரீட்சைப் புள்ளிகளுடன் கூட்டப்படுவதற்கு இறுதிப் பரீட்சையில் அப்பாடநெறியில் பெற்ற புள்ளிகள் 30 அல்லது அதற்குக் கூடுதலாக இருத்தல் வேண்டும். அவ்வாறில்லாதுவிடின் இறுதிப் பரீட்சைப் புள்ளிகள் மட்டுமே அப்பாடநெறியின் இறுதி முடிவுகளைத் தீர்மானிப்பதற்காக கருத்திற்கொள்ளப்படும்.

பாடநெறி ஒன்றினது பரீட்சைப் பெறுபேற்றைத் தீர்மானிக்கும் போது அதி சிறந்த ஒப்படை/அல்லது ஒப்படைகளில் மாணவர்பெற்ற புள்ளிகளின் **சராசரிகளின் 40% உம், எழுத்துப்பரீட்சையில் மாணவர் பெற்றபுள்ளிகளின் 60%** உம் கவனத்திற் கொள்ளப்படும். (அட்டவணை 2.1 இனைப் பார்க்க).

* ஒப்படைப்புள்ளி (X), எழுத்துப் பரீட்சைப் புள்ளி (Y) இன் அடிப்படையில் இறுதிப்புள்ளி (Z) தீர்மானிக்கப்படும் முறை பின்வரும் சமன்பாட்டினால் காட்டப்படுகின்றது.

$$Z = X * 40\% + Y * 60$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை 2.1:** ஒவ்வொரு பாடநெறிகளுக்கும் பூரணப்படுத்த வேண்டிய ஒப்படைகளின் எண்ணிக்கையும் இறுதிப்புள்ளி தீர்மானிக்கப்படும் விதமும்

| பாடநெறிகள் | ஒப்படைக்க வேண்டிய ஒப்படைகளின் எண்ணிக்கை | இறுதிப்புள்ளியை கணிப்பதற்காக பெற வேண்டிய புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| **ESP2201 -** கல்வி உளவியல் | 03 | ஆகக் குறைந்தபட்சம் ஒவ்வொரு ஒப்படையிலும் "C" அல்லது "C" தரத்திற்கு உயர்வான தரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல் ஒப்படைகளின் சராசரிப் புள்ளியிலும் அதே போன்று "C" அல்லது "C" க்கு உயர்வான தரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| **ESP2202 -** கல்வியின் அடிப்படைகள் | 03 | |
| **ESP2204 -** கல்வித்தொழினுட்பம் | 03 | |
| **ESP2205 -** ஒப்பீட்டுக்கல்வியும் கல்விப் பிரச்சினைகளும் | 03 | |
| **ESP2103 -** கல்வி அளவீடும் மதிப்பீடும் | 02 | |
| **ESP2106 -** கல்வி வழிகாட்டலும் ஆலோசனை கூறலும் | 02 | |
| **ESP2107-** கலைத்திட்டக் கொள்கையும் நடைமுறையும் | 02 | |
| **ESP2108-** கல்விமுகாமைத்துவம் | 02 | |
| **ESP2109-** சிறுவர் உரிமைகள் | 02 | |
| **ESP2110-** ஆரம்பக்கல்வி | 02 | |
| **ESP2111-** உள்ளடங்கற் கல்வி | 02 | |
| **ESP2112-** பல்தரக்கற்பித்தல் | 02 | |
| **ESE7311-** கற்பித்தற் பயிற்சி | 10 கிழமைகள் கொண்ட தொடர் கற்பித்தற் பயிற்சி | கட்டம் II இற்கான தமைமையைப் பெற்றுக் கொள்வதற்கு கட்டம் I இல் மேற்பார்வைக்குட்படும் 5 பாடங்களில் 40 இற்கு உயர்வான சராசரிப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 2.4 இறுதிப் பரீட்சைக்கு தகைமை பெறாதோர்

i. குறிப்பிட்ட பாடநெறிக்கான ஒப்படை/ ஒப்படைகளை (அட்டவணை2.1) சமர்ப்பித்து அவற்றில் குறைந்தது C அல்லது 40% சராசரிப்புள்ளியைப் பெறாத மாணவர்களும்,

ii. ஒப்படைகளை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்காதவர்களும்,

இப்பாடநெறியின் இறுதி எழுத்துப் பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.5 ஒப்படைகளை சமர்ப்பித்தல்

பூரணப்படுத்தப்பட்ட ஒப்படைகள் ஒவ்வொன்றையும் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தினம் நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆரம்ப கூட்ட நிகழ்வில் தரப்படும். இத் தினத்தில் அல்லது அதற்கு முன்பாக **நீங்கள் பதிவுசெய்துள்ள பிரதேச / கற்கை நிலையத்தில் மாத்திரம்** பூரணப்படுத்தப் பட்ட ஒப்படைகளைச் சமர்ப்பித்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவேண்டும். **ஏனைய பிரதேச/ கற்கை நிலையங்களில் உங்களின் ஒப்படைகளைச் சமர்ப்பிக்க முடியாது என்பதையும் ஒப்படைகளைத் தபாலில் அனுப்பமுடியாது என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.** உங்களுக்குரிய பிரதேச/ கற்கை நிலையம் உங்கள் மாணவர் பதிவுப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக ஏதும் பிரச்சினைகள் இருப்பின் ஆலோசகரிடம் விசாரித்து அதைத்திருத்தமாக அறிந்து கொள்ளவும்.

கொழும்பு மத்திய நிலையத்தில் ஒப்படைகள் சமர்ப்பிக்கப்படுவது கல்விப்பீடக் கட்டிடத்தில் அதற்கென உள்ள அலுவலகத்தில் ஆகும் என்பதைக் கவனத்திற்கொள்க. கொழும்பு தவிர்ந்த ஏனைய கற்கை நிலையங்களில் ஞாயிறு, திங்கள், ஆகிய நாட்களில் ஒப்படைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. **நேரடியாகவோ தபால் மூலமாகவோ மாணவர்களால் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஒப்படையையும் இடைநிலை, மூன்றாம்நிலைக் கல்வித் துறை ஏற்றுக்கொள்ளாது.** உங்களுக்குரிய பிரதேச/ கற்கை நிலையங்களில் மாத்திரமே ஒப்படைகள் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படும். பிரதேச/ கற்கை நிலையங்களால் பதிவு செய்து அனுப்பப்படும் ஒப்படைகள் மாத்திரமே இடைநிலை, மூன்றாம்நிலைக் கல்வித் துறையினால் புள்ளியிடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

**குறித்துரைக்கப்பட்ட இறுதித்தினத்தின் பின்னர் பிரதேச/ கற்கை நிலையங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்படைகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.6 ஒப்படைகளை சமர்ப்பிக்கும் போது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள்

ஒவ்வொரு ஒப்படைக்கும் முன்பக்கத்தில் அதற்குரிய மடிப்புறை [FOLDER] (ஆரம்ப நிகழ்வின்போது உங்களுக்கு வழங்கப்படும்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இம் மடிப்புறைகளில் கேட்கப்பட்டுள்ள தகவல்கள் சரியாக நிரப்பப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்திக் கொள்ளவும். பதிவிலக்கம், தொடரிலக்கம், ஒப்படை இலக்கம், பாடநெறிக்குரிய குறியீட்டு எண் என்பவற்றில் ஒன்றோ, பலவோ பிழையாக நிரப்பப்பட்டிருந்தால், மேற்படி ஒப்படைக் கான புள்ளி தொடர்மதிப்பீட்டுப் பகுதிக்கு அனுப்பப்படமாட்டாது. இதற்கான முழுப் பொறுப்பையும் மாணவரே ஏற்றுக்கொள்ள வேண்டும். தம்மைப் பதிவுசெய்யும்போது இம் மடிப்புறைகளைப் பெற்றுக்கொள்ளலாம். மடிப்புறைகளில் உங்களது பெயர், முகவரி என்பன சரியாக எழுதப்படாதவிடத்து, புள்ளியிடப்பட்ட ஒப்படைகளை நீங்கள் மீளப்பெறமுடியாது என்பதைக் கவனத்திற்கொள்ளவும். புதிவு செய்யும்போது மடிப்புறைகள் கிடைக்கத் தவறின், இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறையினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும். புள்ளியிடப்பட்ட ஒப்படைகள் நாட்பாடசாலையின் போது பிராந்திய/ கற்கை நிலையத்தில் வைத்து மீளவும் உங்களுக்கு சமர்ப்பிக்க இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை நடவடிக்கை எடுக்கும்.

**2.7** ஒப்படைகள் கிடைக்கப்பெறாவிட்டால் அல்லது ஒப்படைகள் பற்றி ஏதும் பிரச்சினைகள் இருந்தால், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இரண்டாம் மூன்றாம் நிலைக் கல்வித்துறையினருடன் தொடர்பு கொண்டு, காலதாமதமின்றித் தீர்த்துக்கொள்வது மாணவர் பொறுப்பாகும்.


**2.8** ஒப்படைக்கான புள்ளிகள் தொடர் மதிப்பீட்டுப் பகுதிக்கு உடன் அனுப்பப்படுவதால், புள்ளியிடப்பட்டு முடிந்த ஒப்படைகளின் புள்ளிகள் பற்றிய உங்களின் மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கையெடுக்கக் கல்வித்துறை யினால் முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.9 உங்கள் ஒப்படையின் முன்பக்கத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

1. பெயர்:...........................................................
2. பதிவிலக்கம்:...............................................
    a. (எல்லாப்பக்கத்திலும் பதிவிலக்கத்தைக் குறிக்கவும்)
3. மத்திய/கற்கை நிலையம்:.....................................................
4. முகவரி:.........................................................
5. பாடநெறி குறியீட்டு இலக்கம் ஒப்படை இலக்கம் (உதாரணம்: ESP2201(2) என்றவாறு)
6. குழு இலக்கம்..........................
7.




2.10 ஒப்படைகள் தெளிவாக எழுதப் பட்டிருத்தல் வேண்டும். அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.11 பரீட்சகர் குறிப்புக்களை எழுதுவதற்கு ஏதுவாக, தாளின் இடது பக்கத்தில் 4 செ.மீ அகலத்தில் நிரல் ஒன்றை வெற்றிடமாக விடவும்.

2.12 ஓர் ஒப்படைக்குரிய எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளும் ஒன்றாகவே எழுதி ஒப்படைக்கவேண்டும். அவற்றைப் பல்வேறு தொகுதிகளாகப் பிரித்து விடை எழுதுவதைத் தவிர்த்துக் கொள்ளவும்.

2.13 ஒப்படைகளின் பக்கங்கள் சரியாக இணைக்கப்பட்டுள்ளவா என்பதைச் சமர்ப்பிக்க முன்னர் பரிசீலிக்கவும். அதே போல் ஒப்படைகளின் ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளும் ஒழுங்கு முறைப்படி இணைக்கப்பட்டுள்ளனவா என்பதையும் கவனிக்கவும்.

2.14 ஒப்படைகளுடன் சேர்த்து வேறு கடிதங்களை இணைத்து அனுப்பக்கூடாது.

2.15 ஒப்படை சம்பந்தமான விளக்கமான அறிவுறுத்தல்களை ஒப்படைப்புத்தகத்தில் பார்க்கவும். ஒப்படைகள் சமர்ப்பிக்கப்படும்போது அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல் கட்டாயமானது.

2.16 ஒப்படை என்பது மதிப்பீட்டுச் செயன் முறையில் முக்கியமான பகுதியாகும். ஆதலால் அது மாணவனின் சுய ஆக்கமாக இருத்தல் வேண்டும். **ஒப்படைகள் தயாரிக்கும்போது அல்லது சமர்ப்பிக்கும்போது யாதாயினும் நேர்மையீனங்கள் கண்டுபிடிக்கப்படின் மாணவர்களுக்கு "E" தரம் (சித்தியின்மை) வழங்கப்படும்.**

ஒப்படைகள் சம்பந்தமாக மேலதிக விபரங்களையும் அறிவுறுத்தல்களையும் ஒப்படை புத்தகத்தில் தயவுசெய்து பார்க்கவும். ஒப்படைகள் சமர்ப்பிக்கும் போது தரப்பட்ட அறிவுறுத்தல்களை கட்டாயமாக பின்பற்றவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியம்

☞ ஒப்படைகளை குறித்த தினத்தில் பூர்த்தி செய்து நீங்கள் பதிவு செய்துள்ள பிராந்திய/ கற்கை நிலையத்தில் மாத்திரம் ஒப்படைக்கவும். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக ஒப்படைகளைப் பூரணப்படுத்த தவறும் பட்சத்தில் குறிப்பிட்ட பாடநெறியில் சித்தியினை பெற்றுக்கொள்ள முடியாமல் போகும். அவ்வாறு சித்திபெறத் தவறுகின்ற பாடநெறியினை அதற்கு அடுத்த வருடங்களிலேயே பூர்த்தி செய்ய வேண்டியேற்படும். அவ்வாறு சித்தியடையத் தவறுகின்ற பாடநெறிக்காக மீளவும் பாடநெறிக்கட்டணத்தை செலுத்த வேண்டியேற்படும்.

ஒப்படைக்கான தரங்கள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| புள்ளிகள் | தரம் |
|---|---|
| 85 - 100 | A+ |
| 70 – 84 | A |
| 65 – 69 | A- |
| 60 – 64 | B+ |
| 55 – 59 | B |
| 50 – 54 | B- |
| 45 – 49 | C+ |
| 40 – 44 | C |
| 35 – 39 | C- |
| 30 – 34 | D+ |
| 20 – 29 | D |
| 00 – 19 | E |

A+, A, A-, B+, B, B-, C+, C என்பன தொடர் கணிப்பீட்டின் சித்திக்குரிய தரங்களாகும்.

## 3.0 எழுத்துப்பரீட்சை (இறுதிப்பரீட்சை)

3.1 கல்வியாண்டின் இறுதியில் எழுத்துப் பரீட்சை நடைபெறும்.

மூன்று மணித்தியாலங்கள் கொண்ட 8 கட்டாய வினாப்பத்திரங்கள் உள்ளன. "கல்வித் தொழினுட்பம் (ESP2204)" வினாப்பத்திரம் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளைக் கொண்டிருக்கும். முதலாம் பகுதி "பொதுக் கற்பித்தல் முறைகள்" எனவும் இரண்டாம் பகுதி "விசேட கற்பித்தல் முறைகள்" எனவும் அழைக்கப்படும். விசேட கற்பித்தல் முறைக்காக கல்வித் துறைத் தலைவரினால் அனுமதிக்கப்பட்ட பாடங்களில் ஒன்றை மாணவர் தெரிவு செய்யலாம்.

**பாடங்கள்**

1. சமயம் கற்பித்தல் (பௌத்த தர்மம்/ கிறிஸ்தவ சமயம்/ இஸ்லாம் சமயம்/ இந்து சமயம்)
2. தமிழ் மொழி/சிங்கள மொழி/ஆங்கில மொழி
3. புவியியல்/வரலாறு/குடியுரிமைக்கல்வி
4. விஞ்ஞானம்
5. கணிதம்
6. வர்த்தகமும் கணக்கியலும்
7. மனைப்பொருளியல்
8. ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல்
9. அழகியற்கல்வி
10. தகவல் தொழினுட்பம்

- **எக்காரணம் கொண்டும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் விடைத்தாள்கள் மீள் பரிசீலனை செய்யப்படமாட்டாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.**

## 3.2 இறுதிப்பரீட்சை நடைபெறும் காலம்

கல்வியாண்டின் இறுதிப்பரீட்சை 2018 ஜீன் மாதத்தில் நடைபெறும்.

## 4.0 செய்முறைக் கற்பித்தல் ESE7311

இது இரண்டு கட்டங்களில் நடைபெறும்.

**கட்டம் I**

கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டுமாயின் 3,4 மற்றும் 5ஆம் நாட்பாடசாலைகளுக்கு கட்டாயம் சமூகமளிக்க வேண்டும். இம்மூன்று நாட்பாடசாலைகளில் பங்குபற்ற தவறுகின்றவர்களுக்கு கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட வேண்டுமாயின் ESP2201 மற்றும் ESP2204 ஆகிய பாடங்களுக்கு கட்டாயமாக பதிவு செய்துகொள்ள வேண்டும்.



மாணவர் கட்டம் I இனைத் தாம் கற்பிக்கும் பாடசாலையிலேயே பத்து வாரங்களுக்கும் குறையாத காலப் பகுதியில் செய்முறைக் கற்பித்தலில் ஈடுபடுமாறு பணிக்கப்படுவர். பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபட்டிருக்காத ஏனைய மாணவர்கள் இச் செயன்முறைக் கற்பித்தலுக்கென்று தமக்கென ஒரு பாடசாலையை ஒழுங்குசெய்து கல்விப் பகுதிக்கு இதுபற்றி அறியத் தருதல் வேண்டும். இச் செயன்முறைக் கற்பித்தலை திறந்த பல்கலைக் கழகத்தால் நியமிக்கப்படும் முதன்மை ஆசிரியர் மேற்பார்வை செய்து மதிப்பீடுகளைச் செய்வார்.

### கட்டம் II

கட்டம் I இனை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த மாணவர்கள் மட்டுமே கட்டம் IIல் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவர். இலங்கை திறந்தபல்கலைக்கழகம் பெயர் குறிப்பிடும் பாடசாலை ஒன்றில் பல்கலைக்கழக விரிவுரையாளரால் மேற் பார்வை, மதிப்பீடு என்பன செய்யப்படும்.

## 05. சிறப்புத்தேர்ச்சி வழங்கல்



ஒப்படை, எழுத்துப்பரீட்சை, செயன்முறைக் கற்பித்தல் என்பவற்றில் பெற்ற புள்ளிகளைக் கருத்திற்கொண்டே மாணவரின் சித்தி தீர்மானிக்கப்படும். கல்வி டிப்ளோமாப் பரீட்சைப் பெறுபேறுகள் **சாதாரண சித்தி, சிறப்புச் சித்தி, விசேட சித்தி** என்றவாறு மூன்று மட்டங்களில் வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கான பாட நெறிகளில் ஏதாவது ஒன்றிற்காவது பதிவு செய்து, அப்பதிவு மூன்று மாதங்களுள் இரத்துச் செய்யப்படாத நிலையில், அப் பாடநெறிக்கான ஒப்படைகள் சமர்ப்பிக்கப்படாமல் அல்லது ஏதாவது ஒன்றிற்காவது ஒப்படைகள் சமர்ப்பித்து இப்பாட நெறிக்கான இறுதிப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதிபெறத் தவறுமிடத்து அல்லது பாடநெறி ஒன்றின் இறுதிப் பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து சிறப்புச் சித்தி அல்லது விசேட சித்தியைப் பெறும் தகுதியை இழந்துவிடுவர்.

## 06. நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விசாரணைகள்

நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஏதேனும் விசாரணை செய்யவேண்டி ஏற்படின் பின்வரும் ஒழுங்கில் உரிய முகவரிகளுடன் தொடர்புகொள்ள வேண்டும்

| பிரச்சினைகள் | தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்: |
|---|---|
| • பதிவுசெய்தல்<br>• கட்டணம்<br>• கற்கை நிலையங்களை மாற்றுதல் | SAR/Students Affairs<br>The Open University of Sri Lanka,<br>Nawala, Nugegoda.<br>0112881342 |
| • பரீட்சை<br>• பரீட்சைப் பெறுபேறுகள்<br>• பரீட்சை நிலைய மாற்றம்<br>• பரீட்சைக்குத் தோற்றியதற்கான அத்தாட்சிப் பத்திரங்கள் | SAR/Examinations<br>The Open University of.Sri Lanka,<br>Nawala, Nugegoda.<br>0112881350 |
| • கல்வி<br>• ஒப்படைகள்<br>• போதனா வகுப்புக்கள்<br>• நாட்பாடசாலைகள்<br>• கற்பித்தற் பயிற்சி | The Co-ordinator (PGDE)<br>Department of Secondary & Tertiary Education<br>Faculty of Education<br>The Open University of Sri Lanka,<br>Nawala, Nugegoda. |

நீங்கள் அனுப்பும் எல்லாக் கடிதங்களிலும், ஆவணங்களிலும் உங்களது நிகழ்ச்சித்திட்டம், வருடம், பதிவிலக்கம், பெயர், தொலைபேசி இலக்கம், கற்கை நிலையம் போன்ற தகவல்கள் குறிப்பிடப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "PGDE" எனக் குறிப்பிடல் வேண்டும்.

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்குக் கடிதங்களை எழுதாது கல்வித் துறையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகத் தொடர்புகொண்டு அப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது உசிதமானது ஆகும்.

நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர்களைச் சந்திக்கக் கல்விப் பகுதிக்கு வருவதாக இருந்தால் **புதன் கிழமைகளில் மாத்திரமே** வருதல் வேண்டும்.

பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தமாக இக்கைந்நூலில் கூறப்பட்டுள்ள விடயங்களை நன்றாக விளங்கி இதன்படி உங்கள் கல்விசார் நடவடிக்கைகளைத் தொடர்வீர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றீர்கள்.

## 07. நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம்

இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பதிவு செய்துள்ள மாணவர்களுக்காக 12 நாட்பாடசாலைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பக் கூட்டமும், அறிமுகக் கூட்டமும் பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட கற்கை நிலையங்களில் காலை 9.00 மணி முதல் 3.00 மணிவரை நடைபெறும். இக்கூட்டத்துக்கு பதிவு செய்த சகல மாணவர்களும் தவறாது கட்டாயமாகப் பங்குபற்றுதல் அவசியமாகும். பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்சித்திட்டம் தொடர்பான சகல விபரங்களும் நடவடிக்கைகளும் இதில் வழங்கப்படும். நாட்பாடசாலைகள் சம்பந்தமான நேரஅட்டவணையும் ஒப்படைகளும் ஒப்படைகள் சமர்ப்பிக்க வேண்டிய திகதிகள் மற்றும் ஆவணங்களும் அன்றைய தினம் வழங்கப்படுவதால் கட்டாயம் சமூகமளிக்கவும்.

சமூகமளிக்கத் தவறுகின்றவர்களுக்கு ஒப்படைப் புத்தகம் மற்றும் ஏனைய ஆவணங்கள், அறிவுறுத்தல்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போகும். அத்துடன் உங்களுக்கான குழு எது என்பது பற்றியும் அன்றைய தினம் அறிவிக்கப்படும். நிகழ்ச்சித்திட்ட ஆரம்பத் திகதிகள் பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2017/ 2018
ஆரம்பக்கூட்டம்

| | மத்திய நிலையம் | திகதி |
|---|---|---|
| 1. | குருணாகல் | 08/05/2017 |
| 2. | கொழும்பு | 05/05/2017 |
| 3. | அம்பாறை | 16/05/2017 |
| 4. | பண்டாரவளை | 16/05/2017 |
| 5. | பதுளை | 16/05/2017 |
| 6. | கழுத்துறை | 05/05/2017 |
| 7. | இரத்தினபுரி | 25/05/2017 |
| 8. | திருகோணமலை | 17/05/2017 |
| 9. | ஹற்றன் | 12/05/2017 |
| 10. | கண்டி | 15/05/2017 |
| 11. | மட்டக்களப்பு | 15/05/2017 |
| 12. | புத்தளம் | 08/05/2017 |
| 13. | அனுராதபுரம் | 16/05/2017 |
| 14. | வவுனியா | 17/05/2017 |
| 15. | கிளிநொச்சி | 21/05/2017 |
| 16. | யாழ்ப்பாணம் | 20/05/2017 |
| 17. | முல்லைத்தீவு | 19/05/2017 |
| 18. | மன்னார் | 18/05/2017 |

## 08. நிகழ்ச்சித்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்குழு

கீழே தரப்பட்டுள்ள ஆசிரியர் குழு பற்றிய விபரங்கள், தமது பிரச்சினைகள் தொடர்பாக யாரிடம் கலந்துரையாட வேண்டும் என்பதை இனங்காண மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பீடாதிபதி/ கல்விப்பீடம் |  | பேராசிரியர் P. C. பக்கீர் ஜ.்.பார் |
| தலைவர்/ இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வித்துறை |  | கலாநிதி (திருமதி). S. குகமூர்த்தி |
| நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் (சிங்கள மொழிமூலம்) |  | கலாநிதி W. M. S. வணசிங்க |
| நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் (தமிழ் மொழிமூலம்) |  | திரு. P. ராமதாஸ் |
| நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் (ஆங்கில மொழிமூலம்) |  | திருமதி. S. கருணாநாயக்க |
| **பாடநெறி இணைப்பாளர்கள்** | | |
| ESP 2201 கல்வி உளவியல் |  | கலாநிதி பிரபா ஜயவர்தன |
| ESP 2202 கல்வியின் அடிப்படைகள் |  | கலாநிதி. W. M. S. வணசிங்க |
| ESP 2204 கல்வித்தொழினுட்பம் |  | திரு. M. L. சுதர்சன |
| ESP 2205 ஒப்பீட்டுக்கல்வியும் கல்விப் பிரச்சினைகளும் |  | திருமதி. S. கருணாநாயக்க |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ESP 2103<br>கல்வி அளவீடும் மதிப்பீடும் |  | திரு.M.N.C.பெனான்டோ |
| ESP 2106<br>கல்வி ஆலோசனைகூறலும் வழிகாட்டலும் |  | திருமதி. D.V.M.சில்வா |
| ESP 2107<br>கலைத்திட்டக் கொள்கையும் செயன் முறையும் |  | கலாநிதி. F. M. நவாஸ்தீன் |
| ESP 2108<br>கல்வி முகாமைத்துவம் |  | திரு. W. M. S. வீரக்கோன் |
| ESP 2109<br>சிறுவர் உரிமைகள் |  | திருமதி. S. N. ஜயசிங்க |
| ESP 2110<br>ஆரம்பக்கல்வி |  | திரு. K.ஞானரட்னம் |
| ESP 2111<br>உள்ளடங்கற்கல்வி |  | திருமதி. B. G. ஹேமந்தி |
| ESP 2112<br>பல்தரக்கற்பித்தல் |  | செல்வி ராஜினி மங்களேஸ்வரசர்மா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பித்தற்பயிற்சி ESE7311

| | | |
|---|---|---|
| சிங்கள, ஆங்கில மொழிமூலம் - கட்டம் I |  | செல்வி P.A. ருவனி குணவர்த்தன |
| சிங்கள, ஆங்கில மொழிமூலம் - கட்டம் II |  | திருமதி. ரசிக்கா நவரட்ண |
| தமிழ் மொழிமூலம் கட்டம் I&II |  | திரு. J.D.கரீம்டீன் |
| **ஒப்படைகள்** | | |
| சிங்கள மொழிமூலம் |  | திரு. M. L. சுதர்சன |
| தமிழ் மொழிமூலம் |  | திரு.R.விவேகானந்தராஜா |
| ஆங்கில மொழிமூலம் |  | திரு. M. L. சுதர்சன |
| **பாடசாலை உதவியாளர் (Mentoring)** | | |
| சிங்கள மொழிமூலம் |  | திரு.W.M.S.வீரக்கோன் |
| தமிழ் மொழிமூலம் |  | திரு. J. D. கரீம்தீன் |
| ஆங்கில மொழிமூலம் |  | திரு.W.M.S.வீரக்கோன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. கற்பித்தற்பயிற்சி (ESE7311) தொடர்பான விபரங்களும் அறிவுறுத்தல்களும்

### 9.1 கால எல்லை

பட்டமேற்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை பயிலும் நீங்கள் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் குறிப்பிடப்படும் காலஎல்லைக்குள் 10 வாரங்கள் செயன் முறைக் கற்பித்தலில் (கற்பித்தற் பயிற்சி ESE7311) ஈடுபடவேண்டும்.

**கற்பித்தற் பயிற்சியின் கட்டம் (I) ஒன்று இரு காலகட்டங்களாக இடம்பெறும். முதலாவது காலகட்டம் 2017 செப்டெம்பர் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரைக்கும் இடம்பெறும். இரண்டாவது காலகட்டம் 2018 ஜனவரி மாதமும் இடம்பெறும் கற்பித்தற் பயிற்சியின் கட்டம் (II) இரண்டு 2018 மே மாதம் தொடக்கம் 2018 ஜீன் மாதம் வரையான காலப்பகுதியில் இடம்பெறும்.**

கற்பித்தற் பயிற்சி இரண்டு கட்டங்களில் இடம்பெறும். இதில் முதலாவது கட்டம் பத்து (10) கிழமைகள் நீங்கள் கற்பிக்கும் பாடசாலையில் நடைபெறும். இரண்டாவது கட்டம் குறிப்பிடப்படும் வேறு பாடசாலையொன்றில் இரண்டு பாடங்களைக் கற்பித்தல் மூலம் நிறைவு செய்யப்படும். கற்பித்தற் பயிற்சிக்கான ஒவ்வொரு மட்டங்களையும் குறிப்பிடப்படும் கால எல்லையில் நிறைவு செய்தல் வேண்டும். எவ்விதமான காரணங்களின் அடிப்படையிலும் இந்தக்கால எல்லை மாற்றம் செய்யப்பட மாட்டாது. மேலும் கற்பித்தல் பயிற்சி கட்டம் I இனை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்கள் மாத்திரமே கற்பித்தற் பயிற்சி கட்டம் II இற்கு அழைக்கப்படுவார்கள். கற்பித்தற் பயிற்சிக்கான இறுதி சித்தியின் தரம் கட்டம் I மற்றும் கட்டம் II எனபவற்றில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளிலேயே தங்கியுள்ளது என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

### 9.2 சிறப்புத் தேர்ச்சி

முதன்முறையாக கற்பித்தற்பயிற்சிக்காகப் பதிவுசெய்து, கற்பித்தற் பயிற்சியைப் பூரணப்படுத்தியவர்களுக்கு மாத்திரமே கற்பித்தற் பயிற்சிக்காக தரம் “C” இலும் கூடிய தரங்கள் பெறுவதற்கான வாய்ப்பு உண்டு. அடுத்து வரும் வருடங்களில் கற்பித்தற் பயிற்சியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணப்படுத்த முயல்வோர் அதிகூடியதாக "C" தரத்தையே பெறமுடியும். பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தில் திறமை அல்லது விசேட சித்தி பெறுவதற்கு மற்றைய தேவைகளைப் பூரணப்படுத்துவதுடன், கற்பித்தற் பயிற்சியில்" B+" அல்லது "A-" அல்லது "A" அல்லது "A+" தரச் சித்தியைப் பெறவேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## 9.3 கற்பித்தற் பயிற்சியைப் பின்போடல்

யாதாயினும் ஒரு காரணத்தினால் நீங்கள் இக் கல்வியாண்டில் கற்பித்தற் பயிற்சியை மேற்கொள்ள முடியாது என இருந்தால் ESE7311 (கற்பித்தற்பயிற்சி) பாடநெறிக்குப் பதிவு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளவும். விசேடமாக கற்பித்தல் பயிற்சி நடைபெறும் காலப்பகுதியில் மகப்பேற்று விடுமுறையினை பெற்றுக் கொள்ளவுள்ளவர்கள் ESE 7311 இற்குப் பதிவு செய்வதனைத் தவிர்த்துக் கொள்ளவும். நீங்கள் கற்பித்தற் பயிற்சிக்கு பதிவுசெய்து யாதாயினும் ஒரு காரணத்தால் இக் கல்வியாண்டில் கற்பித்தற் பயிற்சியைப் பூரணப்படுத்தாதுவிடின் அடுத்துவரும் கல்வியாண்டில் அதனை மீள்பதிவு செய்து கற்பித்தற் பயிற்சியைப் பூரணப்படுத்த வேண்டி இருக்கும். அப்போது நீங்கள் கற்பித்தற் பயிற்சிக்காக மீளத் தோற்றும் மாணவராகவே கருதப்படுவீர்கள்.

**ஏதேனும் காரணத்தால் மாணவர் இக் கல்வியாண்டில் கற்பித்தற் பயிற்சியில் பங்குபற்றாவிட்டால் அல்லது பூரணப் படுத்தாவிட்டால் அது பற்றி உடனடியாக கல்வித்துறைக்கு அறிவிக்கவும். அத்துடன் தொடர்ந்து வரும் கல்வியாண்டில் கற்பித்தற் பயிற்சிக்கு பதிவு செய்து அக் கல்வியாண்டில் உங்கள் கற்பித்தல் பயிற்சியைப் பூரணப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.**

## 9.4 கற்பித்தற் பயிற்சி (கட்டம் I) தொடர்பான தகவல் படிவங்கள்

கற்பித்தற் பயிற்சிக்குப் **பதிவு செய்யும்போது** அதுபற்றி மாணவர் பதிவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உடன் பரிசீலிக்கவும். கற்பித்தற் பயிற்சிக்காகப் பதிவு செய்யும்போது உங்களுக்குத் தரப்படும் உரிய படிவத்தின் இரு பிரதிகளைச் சரியாகப் பூரணப்படுத்தி கல்வித் துறையினரிடம் அன்றைய தினமே ஒப்படைக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தற் பயிற்சியின் ஒவ்வொரு கட்டத்தின் இறுதியிலும் அக்கட்டத்தினை நீங்கள் பூரணப்படுத்தியுள்ளதாக கடிதம் ஒன்றினை உங்களது கற்பித்தற் பயிற்சிக்குரிய மேற்பார்வையாளரிடம் அல்லது விரிவுரையாளரிடம் பெற்று வைத்துக்கொள்ளவும். கற்பித்தற் பயிற்சிக்குரிய படிவங்களை உரிய முறைப்படி பூரணப்படுத்தி ஒப்படைக்காத ஆசிரிய மாணவர்களுக்கு கற்பித்தற் பயிற்சிக்கான மேற்பார்வையாளர்களை நியமிக்க முடியாது போகலாம்.

## 9.5 கற்பித்தற் பயிற்சியின் முதலாவது கட்டம்

### 9.5.1 ஆசிரியர்கட்கு

நீங்கள் தற்போது ஆசிரியராகப் பாடசாலையில் கடமை புரிபவராயின் கற்பித்தற் பயிற்சியின் முதலாம் கட்டத்தினை உங்கள் பாடசாலையில் குறிப்பிடப்படும் 10 கிழமைகளில் கிழமைக்கு குறைந்தது 10 பாடவேளைகள் வீதம் கற்பித்தலில் ஈடுபடவேண்டும். நீங்கள் கற்பிக்கும் பாடங்களாக ஒரு பாடத்தையோ அல்லது இரண்டு பாடங்களையோ தெரிவுசெய்யலாம்.

### 9.5.2 ஆசிரியர் அல்லாதோர்

பாடசாலை ஒன்றில் கற்பித்தலில் ஈடுபடாத மாணவர்கள் தமது முதலாம் கட்டக் கற்பித்தல் பயிற்சிக்காக பாடசாலையைத் தாமே ஒழுங்கு செய்து கொள்ள வேண்டும். **இது தொடர்பாக பல்கலைக்கழகம் எதுவித பொறுப்பும் ஏற்காது.** தெரிவுசெய்த பாடசாலையில் தொடர்ந்து 50 வேலைநாட்கள் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடுதல் அவசியமாகும். பல்கலைக்கழகம், தொழினுட்பக் கல்லூரி, ஆசிரியர் கல்லூரிகள் போன்ற நிறுவனங்களில் செயன்முறைக் கற்பித்தலுக்காக வசதிகள் செய்துகொள்ள முடியாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### 9.5.3 பாடங்களைத் தெரிவுசெய்தல்

கற்பித்தற் பயிற்சியின் முதலாவது கட்டம் ஐம்பது வேலை நாட்களை உள்ளடக்கிய காலத்தைக் கொண்டது. ஒரு வாரத்தில் குறைந்தது 10 பாட வேளைகள் வீதம் வரக்கூடியவாறு மாணவர் கற்பித்தலில் ஈடுபடவேண்டும். இதன்படி 100 பாட வேளைக்குக் குறையாமல் கற்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். கற்பித்தற் பயிற்சிக்காகக் கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியியல், தமிழ், வர்த்தகம் ஆகிய பாடங்களை மாத்திரமே தெரிவு செய்து கொள்ளலாம் என்பதைக் கருத்திற் கொள்ளவும்

தரம் 6 இல் இருந்து தரம் 11 வரையுள்ள வகுப்புக்களில் தமது கற்பித்தற் பயிற்சிக்கான வகுப்புக்களை மாணவர் தெரிந்து கொள்ளலாம். ஒரு வாரத்தில் கற்பிக்க வேண்டிய பாடவேளைகள் (பத்துக்குக் குறையாமல்) இரண்டு பாடங்களில் அமைதல் வேண்டும். கற்பிப்பதற்கு இரண்டு வெவ்வேறுமட்ட வகுப்புக்களைத் தெரிதல் வேண்டும். அதாவது தரம் 6,7,8, இல் ஒரு பாடத்தையும் தரம் 9,10,11 இல் வேறொரு பாடத்தையும் தெரிவுசெய்தல் வேண்டும். தெரிவு செய்யும் வகுப்பிற்கு நேரசூசியில் ஒதுக்கப்பட்ட குறித்த பாடத்துக்குரிய சகல பாடவேளைகளும் கட்டாயமாக மாணவ ஆசிரியரால் நடத்தப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்க.

இக் கற்பித்தற் பயிற்சிக்கான பாடவேளைகள் உங்கள் வழமையான பாடசாலை வேலைகளுக்கு மேலதிகமாகவே அமையும்.

### 9.5.4 பாடக்குறிப்பும் நேர அட்டவணைகளும்

கற்பித்தற் பயிற்சிக்கென கற்பிக்கும் ஒவ்வொரு பாடவேளைக்கும் ஒவ்வொரு பாடக்குறிப்பு (Notes of Lesson) வீதம் தொடர்ச்சியாக ஐம்பது வேலை நாட்களுக்கும் எல்லாப் பாடவேளைகளுக்கும் பாடக் குறிப்புக்களை எழுதுதல் வேண்டும். கற்பித்தற் பயிற்சி ஆரம்பித்த வாரத்திலேயே உரிய பாடத்திட்டம் (Scheme) தயாரிக்கப்பட்டுப் பூரணப் படுத்தப்படல் வேண்டும். பாடத்திட்டம், பாடக்குறிப்பு என்பன C.R புத்தகத்தில் எழுதுதல் நன்று. ஒரு பாடத்திற்கு ஒரு C.R புத்தகம் வீதம் பயன்படுத்த வேண்டும். C.R புத்தகத்தில் தாள்களை நீக்குதல் குற்றமாகும். இவை இரண்டாம் கட்டக் கற்பித்தற் பயிற்சியின் போதும் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரால் மீள் மதிப்பீடு செய்யப்படும்.

எனவே குறிப்பிட்ட திகதி அன்றே உமது கற்பித்தற் பயிற்சி கட்டம் I இனைத் தொடங்குதல் வேண்டும். கற்பித்தற் பயிற்சி தொடங்கியமை பற்றி அதிபர் மூலம் பாடசாலை சம்பவத் திரட்டுப் புத்தகத்தில் (Log book) இல் பதியப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தற் பயிற்சி - முதலாவது கட்டம் நடைபெறவுள்ள கால எல்லை, மேற்பார்வையாளரின் பெயர், முகவரி என்பன பின்னர் அறிவிக்கப்படும். அப்போது **தாம் கற்பித்தற் பயிற்சிக்கெனக் கற்பிக்கும் வகுப்பு நேரசூசியின் பிரதியொன்றைத் தாமதமின்றி மேற்பார்வையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.** அதில் கற்பித்தற் பயிற்சிக்கெனத் தெரிவு செய்துள்ள பாடவேளைகள் தெளிவாக காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

கற்பித்தற் பயிற்சிக் காலத்தில் மாணவர் லீவு எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். தவிர்க்கமுடியாத காரணத்தால் அவ்வாறு செய்யின் மேற்பார்வையாளரின் கவனத்துக்கு உடன் கொண்டுவருவது மாணவரின் பொறுப்பாகும். எவ்வாறாயினும், குறைந்தது 50 வேலைநாட்கள் கொண்ட கற்பித்தற் பயிற்சியைப் பூர்த்திசெய்ய வேண்டியிருக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

### 9.5.5 மேற்பார்வை முறை

மேற்பார்வையாளர் குறைந்தது ஐந்து பாடவேளைகளில் மாணவரின் கற்பித்தல் களை மதிப்பீடுசெய்வார். அப்போது உங்கள் பாடக்குறிப்பில் அவர்களின் ஒப்பங்களையும் அறிவுறுத்தல்களையும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். கட்டம் I இனைப் பூரணப்படுத்துவதற்காக ஐந்து பாடவேளைகளின் புள்ளிகள் கல்வித்துறைக்குக் கிடைக்கப்பெறல் வேண்டும். ஐந்து பாடவேளைகளிலும் குறைந்த பாடவேளைகள் மதிப்பிட்டிருப்பின் கற்பித்தற் பயிற்சி கட்டம் II இற்கு நீங்கள் தகைமை பெறமாட்டீர்கள்.

கற்பித்தற் பயிற்சி தொடங்கி நான்கு வார காலத்தினுள் ஒரு தடவையேனும் மேற் பார்வையாளர் வராவிட்டால், நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருக்கு உடன் அறிவித்தல் வேண்டும்.

## 9.6 கற்பித்தற் பயிற்சியின் இரண்டாம் கட்டம்

கற்பித்தற் பயிற்சியின் இரண்டாம் கட்டம் உங்களது முதலாவது கட்டம் முடிந்த பின்னரே ஆரம்பமாகும். கற்பித்தற் பயிற்சிக்கென வழங்கப்படும் இறுதிப்புள்ளி இரு கட்டங்களினதும் புள்ளிகளில் தங்கியுள்ளது என்பதைக் கவனிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பித்தற் பயிற்சியின் இரண்டாவது கட்டத்திற்காகப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரினால் குறித் துரைக்கப்படும் ஒரு பாடசாலைக்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள். அவரது ஆலோசனைக்கேற்ப நீங்கள் இரு பாடவேளைகள் கற்பிக்க வேண்டும். உங்களுக்கு குறித்துரைக்கப்பட்ட அத் தினத்தில் அதற்கான ஆயத்தத்துடன் வந்து கற்பிக்க வேண்டும்.

## முக்கியம்

கற்பித்தற் பயிற்சியின் முதலாவது கட்டத்திற்காக உங்களால் எழுதப்பட்ட பாடக்குறிப்பு, பாடத்திட்டம், அதிசிறந்த இரண்டு கற்பித்தல் துணைகள் என்பன முதன்மை ஆசிரியரின் குறிப்புடனும் கையொப்பத்துடனும் **இரண்டாம் கட்டத்தின்போது விரிவுரையாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.** அப்போது அவற்றுக்கென ஒதுக்கியுள்ள புள்ளியை விரிவுரையாளர் உங்களுக்கு வழங்குவார். அச் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாதுவிட்டால் அதற்காகக் கிடைக்கும் புள்ளி உங்களுக்குக் கிடைக்காமற் போய்விடும்.

கற்பித்தற் பயிற்சி இரண்டாம் கட்டத்தின் இறுதியில் மேற்படி ஆவணங்களில் அதி சிறந்த இரண்டு கற்பித்தற் துணைகளும் மேற்பார்வையாளரால் பொறுப்பேற்கப்படும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## 9.7 இறுதிப்புள்ளிகளைக் கணித்தல்

கற்பித்தற் பயிற்சி (ESE7311)இற்கான இறுதிப்புள்ளி பின்வருமாறு கணிக்கப்படும்.

i கற்பித்தற் பயிற்சி கட்டம் ஒன்றில் ஐந்து பாடங்களில் அதிசிறந்த மூன்று பாடங்களின் சராசரியின் (தொடர் மதிப்பீடாகக் கருதி) 40% இனையும்

ii கட்டம் II இன் இரு பாடங்களில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் சராசரியின் (இறுதிப் பரீட்சைப் புள்ளிகளாக கருதப்பட்டு) 60% இனையும் கவனத்திற் கொண்டே தீர்மானிக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MY OUSL


உங்களுக்கு இப்பொழுது திறந்த பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கென உள்ள MYOUSL வசதிகளை பின்வரும் URL முகவரியை பயன்படுத்தி நுழையமுடியும். அதே போல் http://myousl.ou.ac.lk/ மூலம் திறந்த பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தின் மூலமும் அதில் நுழையமுடியும். உங்கள் மாணவர் பதிவுப் புத்தகத்தில் தனிப்பட்ட தகவல் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறு

**User Name : [Student ID]**

**Password :[தேசியஅடையாள அட்டை இலக்கம்]**




அதேபோல http://www.ou.ac.lk/ என்னும் இணைய முகவரியின் மூலமும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தினுள் பிரவேசிக்க முடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியிலுள்ள எழுத்துக்களுடன் முதல் நுழைவின்போது உங்கள் தகவல்களைப் பாதுகாப்பதற்காக password ஐ மாற்றிக் கொள்வதற்கு மறந்துவிடாதீர்கள்.

## 9.8 பிரச்சினைகள்

செய்முறைக் கற்பித்தல் தொடர்பாக விளங்காதவை அல்லது வேறேதும் பிரச்சினைகள் இருந்தால் புதன் கிழமைகளில் மு.ப 10.00 - 12.00 கால இடைவேளைகளில் கல்வித் துறைக்குச் சமுகந்தந்து கற்பித்தற் பயிற்சி இணைப்பாளருடன் தொடர்புகொண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது மிகவும் நல்லது. உங்கள் கற்பித்தற் பயிற்சியைப் பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பது உங்களது பொறுப்பாகும். எங்களால் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் அடிப்படையிலேயே கற்பித்தற் பயிற்சி நடைபெற வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## 10.0 முகவரி மாற்றம்

கற்பித்தற் பயிற்சியை மேற்கொள்ளும் காலத்தில் உங்களது பாடசாலை அல்லது கடமை முகவரிகளில் மாற்றம் ஏற்பட்டால் அதுபற்றி கல்வித் துறைக்குத் தாமதியாது அறிவித்தல் வேண்டும்.

உங்களது தனிப்பட்ட முகவரியில் மாற்றம் செய்ய வேண்டுமெனில் திறந்த பல்கலைக்கழக மாணவர் விவகாரப் பகுதியுடன் குறிப்பிட்ட கிராமசேவகரிடம் பெற்ற கடிதத்தையும் கொண்டு தொடர்பு கொள்ளவும்.

## 11.0 நிறைவாக

இக்கைந்நூலில் தரப்பட்ட அறிவுறுத்தல் களையும் ஆலோசனைகளையும் தெளிவாக வாசித்து விளங்கி அவற்றிற்கமைய உங்களிடம் எதிர்பார்க்கப்படும் பணிகளை நிறைவுசெய்து இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகப்பூர்த்தி செய்யவேண்டுமென வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org